# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2175/2 - 2020 මැයි මස 12 වැනි අඟහරුවාදා - 2020.05.12

*2175/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 12/1978* (III)

**மேன்முறையீட்டு நீதிமன்ற (அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றங்களிலிருந்தான மேன்முறையீடுகளுக்கான நடவடிக்கை முறை) (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள் - 2020**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின் கீழ் பிரதம நீதியரசராலும் அவ்வுறுப்புரையின்கீழ் அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதியரசர்களினாலும் ஆக்கப்பட்ட விதிகள்.

1. ஜயந்த ஜயசூரிய, பிரதம நீதியரசர்
2. பீ. பி. அலுவிஹாரே, உயர் நீதிமன்ற நீதியரசர்
3. கே. எஸ். ஜே. த ஆப்ரூ, உயர் நீதிமன்ற நீதியரசர்
4. பிரியந்த ஜயவர்த்தன, உயர் நீதிமன்ற நீதியரசர்

கொழும்பு,
2020, மே 12.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2020 ஆம் ஆண்டின் மேன்முறையீட்டு நீதிமன்ற (அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றங்களிலிருந்தான மேன்முறையீடுகளுக்கான நடவடிக்கை முறை) (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


1A - PG 32235 — 27 (2020/05)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*2. 1989 ஆம் ஆண்டு மாச்சு 13 ஆந் திகதிய 549/ 6 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1988 ஆம் ஆண்டின் மேன்முறையீட்டு நீதிமன்ற (அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றங்களிலிருந்தான மேன்முறையீடுகளுக்கான நடவடிக்கை முறை) விதிகளின், விதி 2(1)(அ), விதி 2(2), விதி 11(3) மற்றும் விதி 12/(2) ஆகியவற்றில் முரணாக எது எவ்வாறிருப்பினும் -*

*(அ) விதி 2(1)(அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதினான்கு நாட்களைக் கொண்ட காலப்பகுதியைக் கணிப்பதில், 2020, மாச்சு 16 ஆந் திகதியுடன் தொடங்குகின்றதும், 2020, மே 18 ஆந் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியைக் கணக்கிலெடுத்தல் ஆகாது.*

*(ஆ) விதி 2(2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட இருபத்தெட்டு நாட்களைக் கொண்ட காலப்பகுதியைக் கணிப்பதில், 2020, மாச்சு 16 ஆந் திகதியுடன் தொடங்குகின்றதும், 2020, மே 18 ஆந் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியைக் கணக்கிலெடுத்தல் ஆகாது.*

*(இ) விதி 11(3) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதினான்கு நாட்களைக் கொண்ட காலப்பகுதியைக் கணிப்பதில், 2020, மாச்சு 16 ஆந் திகதியுடன் தொடங்குகின்றதும், 2020, மே 18 ஆந் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியைக் கணக்கிலெடுத்தல் ஆகாது ; அத்துடன்*

*(ஈ) விதி 12(2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறுபது நாட்களைக் கொண்ட காலப்பகுதியைக் கணிப்பதில், 2020, மாச்சு 16 ஆந் திகதியுடன் தொடங்குகின்றதும், 2020, மே 18 ஆந் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியைக் கணக்கிலெடுத்தல் ஆகாது.*

*ஜயந்த ஜயசூரிய, பிரதம நீதியரசர்*
*பீ. பி. அலுவிஹாரே, உயர் நீதிமன்ற நீதியரசர்*
*கே. எஸ். ஜே. த ஆப்ரூ, உயர் நீதிமன்ற நீதியரசர்*
*பிரியந்த ஜயவர்த்தன, உயர் நீதிமன்ற நீதியரசர்*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*